# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2073/15 - 2018 මැයි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.31

*2073/15 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குவிதி.*

*பைஸர் முஸ்தபா, சனாதிபதி சட்டத்தரணி,*
*மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்*
*விளையாட்டுத்துறை அமைச்சர்.*

கொழும்பு,
*2018, மே 31.*

ஒழுங்குவிதி

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு இல. : CA WRIT *186/2018* இனால் *2018*, மே *30* ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள கட்டளைக்கு இணங்க *2018*, மே *31* ஆந் திகதி இடம்பெற இருந்த கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் பதவி தாங்குநர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலினை நடாத்துவதை தடுப்பதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதனாலும் ;

*2018*, மே *31* ஆந் திகதி இலங்கை கிரிக்கட் சபையின் தற்போதைய பதவி தாங்குநர்களின் காலம் முடிவுக்கு வருவதனாலும்;

இலங்கை கிரிக்கட்டின் நிர்வாகத்தினை நிச்சயிப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரினை நியமிப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளமையினாலும், பைஸர் முஸ்தபா சனாதிபதி சட்டத்தரணி, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகிய என்னால் இத்தால் திருத்தியமைக்கப்பட்ட *1973* ஆம் ஆண்டின் *25* ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் *41* ஆவது பிரிவின் கீழ் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. ஹேவாதொண்டிலகே கமல் பத்மசிறி அவர்களினை இலங்கை கிரிக்கட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியாக, *2018*, யூன் *01* ஆந் திகதி தொடக்கம் இலங்கை கிரிக்கட்டினை நிர்வகிப்பதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளவும், தொடர்ந்தும் அதனை நிர்வகிப்பதற்காகவும் நியமிக்கின்றேன்.


1A - PG 3878 — 57 (2018/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*